1992 மார்ச் 30]

392---

குடிசை மாற்று வாரிய குடியிருப்புகளின் வாடகையைக் குறைத்தல்.

*804---திரு. டி. எம். ரங்கராஜன் : திரு. எம். கே. பாலன் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா---

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு சொந்தமான குடியிருப்புகளுக்கு அதிகப்படுத்தியுள்ள வாடகையைக் குறைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்குச் சொந்தமான குடியிருப்புகளுக்கு தற்பொழுது வசூலிக்கப்பட்டு வரும் மாதத் தவணைத் தொகையை குறைக்கக் கோரி மனுக்கள் வந்துள்ளன. அவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு. டி. எம். ரங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைப் பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளுக்கான வாடகையைக் குறைப்பதோடு, அங்கே குடியிருப்பவர்களுக்கு அந்தக் குடியிருப்புக்களை 'ஹயர் பர்சேஸ்' ஸ்கீமிலே அவற்றைச் சொந்தமாக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஹயர் பர்சேஸ் என்ற முறையிலே ஏற்கனவே, போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளில் ஆகஸ்டு 1989 வரை குடியிருந்து வந்த தகுதிவாய்ந்த ஒதுக்கீடு தாரர்கள் அல்லது அவர்களது வாரிசுதாரர்கள் தவணை முறையில் குடியிருப்புகளை ஒதுக்கிக் கொடுக்கத் தகுதியுடையவர்களாவார்கள். தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தினால் கட்டப்பட்ட குடியிருப்புகளைப் பொறுத்தவரையில் அவைகளில் தற்போது வசித்து வரும் யாவருமே அந்தத் திட்டத்தில் தகுதியுடையவர்களாக இருந்தார்கள். அந்த அடிப்படையிலே கடந்த $2\frac{1}{2}$ ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அந்தத் தொகை அதிகப் படுத்தப்பட்டது. 1971 ஆம் ஆண்டு வரை கட்டப்பட்ட வீடுகளுக்கு மாதத் தவணையாக 50 ரூபாய் பத்து

ஆண்டுகளுக்குச் செலுத்த வேண்டும் என்றும், அதே போல, 1980 ஏப்ரல் முதல் 1990 மார்ச் முடிய கட்டப் பட்ட வீடுகளுக்கு ரூ. 125, 15 ஆண்டுகளுக்குத் தவணைத் தொகையாகவும் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. அதேபோல, 1–4–1990-க்குப் பிறகு கட்டப் பட்டு, ஒதுக்கீடு செய்யப்பட்ட குடியிருப்புகளைப் பொறுத்த வரையில் மாதத் தவணையாக ரூ. 150 வீதம் 20 ஆண்டு களுக்கு வசூலிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கராஜன் அவர்கள் ஏற்கெனவே வாரியத் தலைவரிடம் இந்தத் தொகை அதிகம் என்று மனு கொடுத்திருக்கின்றார்கள். அதேபோல, திரு ஜி. வெங்கடேசன் என்பவர் சென்னை மாநகராட்சி 100-வது வட்டத்தில் உள்ள திருவல்லிக்கேணி பகுதியில் கணேசபுரத் தில் வாரியக் குடியிருப்புகளில் குடியிருப்போர் வாடகை யாக ரூ. 22 செலுத்தி வந்தார். ஆனால் அதைத் தவணை முறைத் திட்டத்தின் கீழே ரூ. 150 ஆக செலுத்த வேண்டியது இல்லை என்று தெரிவித்து மனுவைக் கொடுத் திருக்கின்றார். அதேபோல, அரசிடமும் ஏகப்பட்ட புகார் கள் இந்தத் தொகை அதிகமாக இருக்கின்றது என்று வந்திருக்கின்றன. இவை சம்பந்தமாக போற்றுதற்குரிய முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு தற்போது இருக்கின்ற நிதிநிலைமையைக் கவனத்திற் கொண்டும், வாரியத்தினுடைய நிதிநிலைமையை அனு சரித்தும், பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். கே. பாலன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியம் முதன் முதலில் வீடு கொடுக்கின்றபோது வாடகை 10 ரூபாய் என்று வசூலிக்கப்பட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அது 22 ரூபாயாக இருந்தது. அன்றைக்கு 70 சதவீதம் வசூலிக்கப்பட்டு வந்தது. ஆனால், இடையிலே வந்த தி. மு. க. அரசு எல்லா வீடுகளையும் ஹயர் பர்சேஸ் என்ற முறை யில் ஆக்கிவிட்ட காரணத்தினால் இன்றைக்குக் குறைந்தது சுமார் $3\frac{1}{2}$ கோடி ரூபாய் வசூலிலே பாக்கி இருந்து கொண்டிருக்கிறது. ஆகையால், இன்றைக்கு 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற முத்திரையாக குடிசை மாற்று வாரியத்தின் சின்னமாக இருந்து கொண்டி ருக்கிற கார்ணத்தினால், இன்றைக்கு மாதம் 300 ரூபாய் வருமானம் உள்ளவர்கள்தான் குடிசைமாற்று வாரிய வீடு களிலே வசித்துக் கொண்டிருக்கிறார்கள். இடையிலே, தி. மு. க. அரசு இதுபோன்ற வீடுகளையெல்லாம் ஹயர் பர்சேஸ் திட்டத்திலே கொண்டு வந்த காரணத்தினால், வாடகையை வசூல் செய்ய முடியாமல் முன்னாடி இருந்த வசூலினைவிட இன்றைக்கு வசூல் குறைந்திருக்கிற நிலைமை உள்ளது. ஆக, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள்

'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்' என்று சொல்லாமலேயே கொடுத்துக் கொண்டிருக்கிற அவர்களுடைய அரசு இதை மீண்டும் பரிசீலனை செய்து வாடகையைக் குறைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவணை முறை திட்டம் ஏற்கனவே அமல் படுத்தப்பட்டு வந்திருக்கிறது. அந்தத் தவணை முறைத் திட்டத்தில்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போல 35,797 வாடகை முறை திட்டத்தில் உள்ள குடியிருப்புகளில் தவணை முறைத் திட்டத்திற்காக மாற்றப்பட்ட குடியிருப்புகள் மொத்தமே 4,604 என்பது குறிப்பிடத் தக்கது. அந்த அடிப்படையிலேயும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையும் இன்று குடிசை மாற்று வாரியத்திலே கட்டுமானச் செலவினுடைய செலவினமும், அதைப் பராமரிக்கக் கூடிய செலவினமும் அதிகரிக்கின்ற காரணத்தினால் வாரியத்தினுடைய நிதிநிலைமையை அனுசரித்து மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ப. ரங்கநாதன்.

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் ஏறத்தாழ 20 ஆண்டுகளாக நலிந்த பிரிவினர் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளிலே வசித்து வருகிறார்கள். நமது முதல்வர் அவர்கள் குறிப்பாக பெண்களுக்காக பல்வேறு நலத் திட்டங்களை இலவசமாக அறிவிக்கின்ற நேரத்தில் அந்தக் குடிசை மாற்று வாரியத்தின் குடியிருப்புகளில் வசிக்கின்ற ஏழைகளுக்கு, பாமரர்களுக்கு, நலிந்த பிரிவினருக்கு இலவசமாக அந்த வீடுகளை வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்வதோடு, இலவசமாக வழங்குகின்ற திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய வினா, தனி வினா என்றபோதிலும், தற்போது இருக்கின்ற நிதிநிலையிலேயும் வாரியத்தினுடைய மோசமான நிதிநிலை பற்றாக்குறை காரணமாகவும் இலவசமாக வீடுகள் கொடுப்பதற்கு எந்தவிதமான செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1992 மார்ச் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன்.

மாண்புமிகு திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிசைமாற்று வாரிய வீடுகளை இதற்கு முன்னர் இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே பலர் அவர்கள் பெயரிலே எடுத்து வியாபாரம் செய்து இருக்கிறார்கள். பலருக்கு விற்றிருக்கிறார்கள். வாடகைக்குத் தந்திருக்கிறார்கள். இதுகுறித்து பல புகார்களும் வந்திருக்கின்றன. இவை குறித்து அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக போற்றுதலுக்குரிய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவியினுடைய அரசு இது சம்பந்தமான புகார்களைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 393: திரு. ஆர். தங்கராஜ், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

393—

சாலைக்கரைக் கிராமத்தில் பாலர் பள்ளி.

* 2929—திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்குவிடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியத்தில், சாலைக்கரைக் கிராமத்தில், தனியாக பாலர் பள்ளி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை,

திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் சொல்லிவிட்டார்கள். போற்றுதலுக்குரிய நம்முடைய புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே ஆண்டிமடம் சட்டமன்றத் தொகுதியிலே இருக்கின்ற மக்கள் மிகவும் வறுமையிலே வாடுகின்ற மக்கள்